

பாமாலை 161 முன்னே சரீர வைத்தியனாம்

1 முன்னே சரீர வைத்தியனாம்
லூக்காவை த் தேவரீர்
ஆன்மாவின் சா நோய் தீர்க்கவும்
கர்த்தாவே , அழைத்தீர்

2 ஆன்மாவின் ரோகம் நீக்கிடும்
மெய்யான வைத்தியரே
உம வார்த்தையாம் மருந்தினால்
நற் சுகம் ஈயுமே.

3 கர்த்தாவே பாவக் குஷ்டத்தால்
சா வேதனையுற்றோம்
உம கரத்தால் தொட்டருளும்
அப்போது சுகிப்போம்

4 ஆன்மாக்கள் திமிர்வாதத்தால்
மரித்துப் போயினும்
நீர் வல்ல வாக்கைக் கூறுங்கால்,
திரும்ப ஜீவிக்கும்

5 துர் ஆசை தீய நெஞ்சிலே
தீப்போலக் காயினும்,
உம சாந்த சொல்லால் கோஷ்டத்தை
தணியச் செய்திடும்

6 எத்தீங்கும் நீக்கும், இயேசுவே
நற்பாதம் அண்டினோம்;
உம் பூரண கடாட்சத்தால்
சுத்தாங்கம் பெறுவோம்